Source: *Tamil Murasu*, p2
Date: 4 February 2018

# தாதிமைத் துறையில் புதிய ஈராண்டு பட்டப்படிப்பு

சுகாதாரப் பராமரிப்புத் துறையில் இன்னும் அதிகமான உள்ளூர்வாசிகளை ஈர்க்க புதிய பட்டப் படிப்பு அறிமுகம் காண்கிறது. வேறு துறையிலிருந்து தாதிமைத் துறைக்கு வர விரும்பும் சிங்கப்பூரர்கள், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தால் நிர்வகிக்கப்படும் இரண்டு ஆண்டு பட்டப் படிப்பை மேற்கொள்ளலாம்.

தாதியர்களுக்கு ஏற்கெனவே நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரி வழங்கும் இரண்டு ஆண்டு பட்டயக்கல்வியோடு இந்தப் புதிய பட்டப்படிப்பு கூடுதல் வாய்ப்பளிக்கிறது.

மூப்படையும் சமுதாயத்திற்குத் தயாராகும் வகையில் வலுவான தாதிமைத் துறையை உருவாக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்று சுகாதார மூத்த துணை அமைச்சர் ஏமி கோர் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.